இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 114 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 18 – செவ்வாய்க்கிழமை 03 டிசம்பர் 2024 – வெளியீடு 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 114: Thiruvalluvar Year - 2055 - Karthigai 18 - Tuesday 03 December 2024 - Dak 10 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) செங்கல்பட்டு மாவட்டம், இடைகழிக்காடு பகுதியில் “ஃபெஞ்சல்” புயல் காரணமாக பெய்த கனமழையால் மின்கம்பங்கள் வீழ்ந்ததையொட்டி, மின்கம்பங்கள் அமைத்திடும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் எம்.பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.அருண்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) விழுப்புரம் கிழக்கு, பாண்டி ரோட்டில் உள்ள வி.வி.ஏ. மஹாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு வேட்டி, சேலை, உணவுப் பொருட்கள் மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார். உடன், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், லட்சுமணன், சிவா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், போக்குவரத்துத் துறை ஆணையருமான சுன்சோங்கம் ஜடக் சிரு, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில்

# கனமழை பாதிப்பு, கள ஆய்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## காணொலி மூலம் கடலூர் பணிகளையும் ஆய்வு செய்தார்!

**விழுப்புரம், டிச.3-**

**செங்கல்பட்டு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை ஆய்வு செய்து உரிய நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அம்மாவட்டங்களின் பல்வேறு இடங்களுக்குச் சென்று நேற்று கள ஆய்வு மேற்கொண்டார்.**

**கடலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகள் குறித்து, காணொலி மூலம் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களை தொடர்பு கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.**

ஃபெஞ்சல் புயல் பாதித்த மாமல்லபுரம் மற்றும் மதுராந்தகம் கோட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும், பொதுமக்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

### செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் மற்றும் புதுச்சேரி இடையே ஃபெஞ்சல் புயல் சனிக்கிழமை கரையை கடந்தது. இதனால், மேற்கண்ட பகுதிகள் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ததால், நீர் நிலைகள் நிரம்பி உபரிநீர் வெளியேறியதால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மதுராந்தகம் வட்டத்தில் பல்வேறு ஏரிகள் நிரம்பி உபரிநீர் வெளியேறியதால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. இதே போல், மாமல்லபுரம் அடுத்த தேவனேரி பகுதிகளிலும் இருளர் மக்கள் குடியிருப்புகள் முற்றிலும் சேதமடைந்தன.

இந்நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் மழை வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திங்கள்கிழமை கிழக்கு கடற்கரைச் சாலை வழியாக விழுப்புரம் புறப்பட்டுச் சென்றார். அப்போது, மாமல்லபுரம் அருகேயுள்ள தேவனேரியில் உள்ள இருளர் இன மக்களைச் சந்தித்து வெள்ளப் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், அப்பகுதி மீனவர்கள் தேவனேரி பகுதியில் கடல் அரிப்பை தடுக்கும் வகையில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் மற்றும் இருளர் இன மக்களுக்கு குடியிருப்புகள் அமைத்து தர வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் மனுக்களை வழங்கினர்.

பின்னர், அங்கிருந்து கல்பாக்கம் பகுதிக்குச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார். பின்னர், இடைக்கழிநாடு பேரூராட்சி பகுதியில் உள்ள கடப்பாக்கம் அடுத்த சேமிலிபுரம் பகுதியில் சேதமடைந்த மின் கம்பங்கள் மற்றும் மின்சார வாரியத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பொதுமக்கள் வழங்கிய பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு விழுப்புரம் புறப்பட்டுச் சென்றார். இந்த ஆய்வின் போது, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் உள்பட பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

### விழுப்புரம் மாவட்டம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயலால் தொடர் கனமழை பெய்ததையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்,

மரக்காணம் ஒன்றியம், மண்டவாய்புதுக்குப்பம் புயல் பாதுகாப்பு மையத்திற்கு நேரில் சென்று அங்கு தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான அரிசி, வேட்டி - சேலை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

அதுபோது, அமைச்சர்கள் க.பொன்முடி, எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.எஸ்.மஸ்தான், நா.எழிலன் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

---

## பெரியாரியக் கொள்கைகளை நாளும் சமுதாயத்தில் விதைத்திடும்

# ஆசிரியர் கி.வீரமணி அய்யா வாழிய பல்லாண்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 3 -**

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழினம் விழிப்புறவும் பகுத்தறிவால் மேன்மையுறவும் நாளும் தன் பரப்புரைத் தொண்டறத்தை மேற்கொண்டு வரும் பெரியாரின் பெருந்தொண்டர், தாய்க்கழகத்தின் தலைவர் மானமிகு ஆசிரியர் கி. வீரமணி அய்யா அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தமிழினத்தின் அரணாக விளங்கும் பெரியாரியக் கொள்கைகளை நாளும் சமுதாயத்தில் விதைத்திடும் ஆசிரியர் வாழிய பல்லாண்டு!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2024) திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 92–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ.மோகனா அம்மையார், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.